சிறந்ததாகும். அரசே கட்டாயப்படுத்தி தெய்வீகப் பேரவைக்கு ஒவ்வொரு ஆதீனமும் முடிந்த அளவு நிதியுதவி செய்ய வேண்டு மென்று கேட்பது அவ்வளவு பொருத்தமல்ல.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: திரும்பவும் குறுக்கிடுவதற்கு, அன்புகூர்ந்து மன்னிக்க வேண்டும். கட்டாயப்படுத்தி எங்களுக்கு நிதி உதவி அளிக்கச் செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. ஒவ்வொரு ஆண்டும் 'டைவர்ஷன்–அப்ளிகேஷன்' போட்டு, ஆணையரிடமிருந்து அனுமதி பெற வேண்டியுள்ளது அப்படி 'டைவர்ஷன்-அப்ளிகேஷன்' கொடுக்காமல், பட்ஜெட்டிலே இவ்வளவு விழுக்காடு என்று நிதி ஒதுக்குவது மூலமாகவே கிடைக்கிற முறையில் வழி அமைத்துத் தர வேண்டும் என்பது தான் எங்களுடைய கோரிக்கை.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது இருக்கின்ற அற நிலையச் சட்டத்தில் இந்து மதத்தினுடைய வளர்ச்சிக்கு என்று நிதி வசதிகள் செய்வதற்கு வழிவகைகள் இருக்கின்றன. அப்படியிருக்க தெய்வீகப் பேரவைக்கு என்று ஒரு குறிப்பிட்ட அளவு கட்டாயமாக நிதி கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: கட்டாயம் என்பதல்ல. 'டைவர்ஷன்-அப்ளிகேஷன்' கொடுக்காமல் பட்ஜெட்டிலே அப்ரூவல் வாங்கிக் கொண்டு நிதி ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அதுபற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(பிற்பகல் 4-30)

2. அறிவிப்பு

பேரவையிலிருந்து செய்திகள்

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: பேரவையால் நிறைவேற்றப் பட்டு அரசியலமைப்புச் சட்டத்தின் 199–வது பிரிவுப்படி பணச்சட்ட முன்வடிவு எனப் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்பட்டு இம்மேலவை யின் பரிந்துரைக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவு பேரவைத் தலைவரால் அனுப்பப்பட்டுள்ளது:

தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு கேளிக்கை வரி-உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1975).

1975 அக்டோபர் 27] [மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்]

பேரவையால் நிறைவேற்றப்பட்டு, இம்மேலவையின் ஒப்புதலுக்காக கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் பேரவைத் தலைவரால் அனுப்பப் பட்டுள்ளன என்பதை அவைக்கு அறிவிக்கிறேன் :—

(1) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, மாவட்ட நகராட்சி மன்ற உறுப் பினர்கள் (பதவிக்கால நீடிப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 45/1975).

(2) தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (பதவிக்கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1975),

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

மதுரையிலுள்ள செளராஷ்டிரா பள்ளியில் இலவச உடை வழங்கும் போது 19 பேர்கள் உயிர் இழந்தது குறித்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் 26-10-75 அன்று மதுரையில் உள்ள செளராஷ்டிரா பள்ளியில் ஆயிரக் கணக்கான ஜனங்களுக்கு இலவசமாக உடைகள் வழங்குகிறபோது 18 பெண்களும் ஒரு ஆணும் இறந்திருக்கிறார்கள்....

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலில் உறுப்பினர் தீர்மானத்தைப் படிக்கவேண்டும். பிறகு பேசலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : துணைத் தலைவர் அவர்களே, "26-10-75 அன்று மதுரையிலுள்ள செளராஷ்டிரா பள்ளியில் இலவச உடை வழங்கும் போது 19 பேர்கள் உயிர் இழந்தது பற்றி விவாதிக்க இந்த சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டு கிறேன்".

அங்கே 19 பேர் இறந்திருக்கிறார்கள். இலவசமாக புடவைகளும் வேஷ்டிகளும் கொடுக்கிறார்கள் என்று சொன்ன உடனேயே ஆயிரக் கணக்கான மக்கள் அதைப் பெறுவதற்காகச் செல்லும் தருணத்திலே துரதிருஷ்டவசமாக உயிர் இழந்திருக்கிறார்கள். இதிலிருந்து நாட்டிலே எவ்வளவு ஏழைகள் இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. இதுமாதிரிச் சம்பவங்கள் பல்வேறு நிலைகளிலே உயிரை இழந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டுகூட ஒரு சினிமா தியேட்டரிலே டிக்கெட்டு வாங்கிக்கொண்டிருக் கும்போது, நெரிசல் காரணமாக 4 பேர்களுடைய உயிர் போயிருக்கின்றது. இந்த வருஷமும் அதே மாதிரி இலவசமாக உடை கொடுத்திருக்கிறார்கள் என்ற காரணமாக, 19 பேர்களுடைய உயிர் போயிருக்கிறது. ஆகையினால் இம்மாதிரியான சம்பவங்கள் நடக்காதிருக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு தகுந்த நடவடிக்கை எடுத்தால்தான், இம்மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் இருக்கும். இந்தத் தீர்மானத்தை பற்றி விவாதிப்பதற்கு இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்குமாறு நான் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்,